மக்கள் குரல்
நடுநிலை நாளேடு
31.08.2019,பக்கம்-6




# கேபிஆர் பொறியியல் கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கம்

கோவை, ஆக. 31–

கேபிஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை சார்பில், 'தகவல் தொழில்நுட்ப துறையின் தற்போதைய நிலையும் அதன் எதிர்கால போக்கும்' என்ற தலைப்பிலான ஒரு நாள் கருத்தரங்கு கல்லூரியில் நடைபெற்றது. கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையின் தலைவர் அகிலா தலைமை தாங்கினார்.

ஐசிடி அகாடமியுடன் இணைந்து நடத்திய இந்த கருத்தரங்கில், ஆல்செக் டெக்னாலஜி நிறுவனத்தின் மனிதவள மேலாளர் வசந்த் ராகவன், சீமென்ட்ஸ் டெக்னாலஜி அன்டு சர்வீஸ் நிறுவனத்தின் மனிதவள மேலாளர் கதிர், ரெபியோ இந்திய நிறுவனத்தின் பிரசாந்த் மற்றும் அஜய் பாலாஜி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

கல்லூரியின் முதல்வர் பொம்மண்ண ராஜா, கல்லூரியின் முதன்மை செயலர் ஏ.எம்.நடராஜன் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.